மே - 25

# TNPSC துளிகள்

- சமீபத்தில் புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கோதுமையில் "Rht14" மற்றும் "Rht18" என்று 2 மாற்று குள்ளத் தன்மையுடைய மரபணுக்களைக் கண்டறிந்துள்ளனர்.
    - இது நெற்பயிர்க் கழிவு எரிப்பை (தாளடிப் பயிர் எரிப்பு) குறைக்க உதவ இருக்கின்றது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் பாதுகாப்புத் துறையில் இருக்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மின்னணு முறையிலான ஒரு மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
    - இந்த மாநாடானது 2025 ஆம் ஆண்டு வாக்கில் 25 பில்லியன் மதிப்பிற்கு பாதுகாப்பு உற்பத்தி என்ற தனது இலக்கை அடைய இந்தியாவிற்கு உதவ இருக்கின்றது.
- சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ரஷ்யாவுடன் கடந்த 18 ஆண்டுகளாக நீடித்து வரும் திறந்த வான்வெளி ஒப்பந்தத்திலிருந்து விலகும் தனது திட்டத்தை அறிவித்துள்ளார்.
    - இந்த ஒப்பந்தமானது 2002 ஆம் ஆண்டில் இராணுவ வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்காக கையெழுத்திடப் பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது ரெப்போ விகிதத்தை 4.4%லிருந்து 4% ஆகக் குறைத்து அறிவித்துள்ளது.
    - தலைகீழ் ரெப்போ விகிதமானது 3.35% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்


## உலகில் PPE உற்பத்தியாளர்

- உலகில் தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தின் (PPE - Personal Protective Equipment) இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளர் நாடு இந்தியா ஆகும்.
- உலகில் PPE உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு சீனா ஆகும்.
- தற்பொழுது இந்தியா ஒவ்வொரு நாளும் 2.06 இலட்சம் PPE உபகரணங்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது.
- சமீபத்தில் ஐவுளிக் குழுவானது PPE மீதான செயற்கை இரத்தத்தை உட்செலுத்தல் என்ற ஒரு சோதனையைத் தொடங்கியுள்ளது.




## பணி நேரத்தை அதிகரிப்பதற்கான அவசரச் சட்டம்


- ❖ மத்திய அரசானது தொழிலாளர்களின் பணி நேரங்களை மாநில அரசுகள் தங்களின் தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ள அனுமதியளித்திட வேண்டி ஒரு அவசரச் சட்டத்தை இயற்ற உள்ளது.
- ❖ இந்த அவசரச் சட்டமானது பணியாளர்களின் பற்றாக்குறை என்ற பிரச்சினையைக் களைய இருக்கின்றது.
- ❖ இது நிறுவனங்கள் சமூக விலகலைக் கடைபிடிக்க வழிவகை செய்கின்றது.
- ❖ மேலும் இது தொழில்சார் பாதுகாப்பு, பணி நிலைமை மற்றும் சுகாதாரம் குறித்த நெறிமுறைகளையும் செயல்படுத்த இருக்கின்றது.
- ❖ இந்த நெறிமுறையானது பணி நேரங்களை அறிவிக்க மாநிலங்களுக்கு உதவ இருக்கின்றது.
- ❖ தற்பொழுது, சட்டத்தின் படி பணியாளர்களின் குறிப்பிடப்பட்ட பணி நேரம் ஒரு நாளைக்கு 8 மணி நேரமாகும்.
- ❖ மத்தியப் பட்டியலில் உள்ள சட்டங்களை மாநில அரசுகள் திருத்த முடியாது.
- ❖ மாநில அரசுகள் மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் ஆகியவற்றில் உள்ள சட்டங்களின் மீது மட்டுமே திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.



# சர்வதேசச் செய்திகள்

## புதிய நீர் வழிகள்

- வங்க தேசத்தில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வர்த்தக நெறிமுறையின் இரண்டாவது ஒப்பந்தத்தில் இந்தியாவும் வங்க தேசமும் கையெழுத்திட்டுள்ளன.
- இது பூடான் சரக்குகள், கற்சில்லுகள் மற்றும் வடகிழக்கு மாநிலத்தின் சரக்குகளை வங்க தேசத்திற்கு ஏற்றுமதி செய்ய வேண்டி உதவ இருக்கின்றது.
- இது வங்கதேசம் மற்றும் கீழை அசாமின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய இருக்கின்றது.
- இந்த 2 நாடுகளும் 4 புதிய வழிகளுடன் திரிபுராவில் கோமதி நதியின் மீது சோனமுரா-தௌத்கண்டி வழி மற்றும் வங்க தேசத்தில் ராஜ்சஹி - துளியன் - ராஜ்சஹி வழி ஆகியவற்றை இந்தியா - வங்கதேச நெறிமுறை வழிகளின் பட்டியலில் சேர்ந்துள்ளது.
- மையா, கோலாகாட், சோனமுரா, துளியன் மற்றும் ஜோகிகோபா ஆகியவை இந்தியாவிடம் உள்ள 5 புதிய வழிப் பாதைத் துறைமுகங்களாகும்.
- வங்க தேசத்திடம் சுல்தான்கன்ஞ், ராஜ்சாஹி, சில்மாரி, பகதூராபாத் மற்றும் தௌத்கண்டி ஆகிய வழிப் பாதைத் துறைமுகங்கள் உள்ளன.
- ஜோகிகோபாவின் இணைப்பானது மேகாலயா, பூடான் மற்றும் அசாம் ஆகியவற்றோடுத் தொடர்பை ஏற்படுத்த உதவ இருக்கின்றது.
- தற்பொழுது இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கு இடையே வழிப் பாதை துறைமுகங்கள் 6 என்ற எண்ணிக்கையில் இருக்கின்றன.
- இந்தியாவிடம் ஹால்தியா, கொல்கத்தா, பாண்டு, கரீம்கஞ்ச், துப்ரி மற்றும் சில்காட் ஆகியவை உள்ளன.
- வங்க தேசத்திடம், குல்னா, நாராயண்கஞ்ச், சிராஜ்கஞ்ச், மோங்லா, பங்கோன் மற்றும் அசுகஞ்ச் ஆகியவை உள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## பொது நிதியியல் விதிகள்

- மத்திய அரசானது ரூ.200 கோடிக்குக் குறைவான மதிப்பு கொண்ட சரக்குகள் மற்றும் சேவைகளை உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதை உறுதி செய்வதற்காக பொது நிதியியல் விதிகளை (GFR- General Financial Rules) திருத்தியுள்ளது.
- இதற்காக GFR 2017 ஆனது மத்திய அரசினால் திருத்தப் பட்டுள்ளது.
- புதிய திருத்தத்தின்படி, இனி உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் ரூ.200 கோடி மதிப்பு வரையிலான அரசாங்கக் கொள்முதலில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டாது.
- "உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் அனுமதிக்கப்பட மாட்டாது" என்பது உள்நாட்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதற்காக வேண்டி ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு அந்நிய முதலீட்டைத் தடை செய்தல் என்பதாகும்.

## புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள்

- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனாவின் மூன்றாவது கட்டத்தில், ஊரக சாலை வளர்ச்சியில் புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள் பயன்படுத்தப்பட இருக்கின்றன.
- இது தேசிய ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி ஆணையத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.

- புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள் மட்கிய நிலை கொண்டதாக உருமாறுகின்றன.
- இது மண்ணை வளம் கொண்டதாக மாற்றுகின்றது.
- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனாவின் மூன்றாம் கட்ட நிலையானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இதன் நோக்கம் கிராமிய வேளாண் சந்தைகள், மருத்துவமனைகள் மற்றும் உயர்கல்வி இடைநிலைப் பள்ளிகள் ஆகியவற்றை இணைப்பதாகும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பகுதி (ESA)

- மேற்குத் தொடர்ச்சி மலையின் சுற்றுச்சுழல் பாதுகாப்புப் பகுதி குறித்து முன்கூட்டிய அறிவிப்பு வெளியிடுவதைத் துரிதப்படுத்த 6 மாநிலங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.
- கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை இந்த 6 மாநிலங்களாகும்.
- மத்திய அரசானது மேற்குத் தொடர்ச்சி மலையின் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதற்காக டாக்டர் கஸ்தூரி ரங்கன் தலைமையில் ஓர் உயர் மட்டப் பணிக் குழுவை அமைத்தது.
- அதற்கு முன்பு காட்கில் தலைமையில் ஒரு குழுவானது அமைக்கப் பட்டிருந்தது.
- கஸ்தூரி ரங்கன் அறிக்கையானது மேற்குத் தொடர்ச்சி மலையின் 37% பகுதியை ESA என்ற பகுதியின் கீழ் கொண்டு வர முயல்கின்றது. காட்கில் அறிக்கையானது இதனை 64% (ESA - Ecologically Sensitive Area) ஆகப் பரிந்துரைத்திருந்தது.
- ESAகள் என்பவை பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசியப் பூங்காக்கள், வனவிலங்கு சரணாலயங்கள் ஆகியவற்றைச் சுற்றிலும் 10 கிலோ மீட்டருக்குள் இருக்கும் ஒரு பகுதியாகும்.
- ESA ஆனது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 என்ற சட்டத்தின் கீழ் மத்திய

சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் அறிவிக்கப் படுகின்றன.




# மாநிலச் செய்திகள்

## ஒடிசாவில் ஒப்பந்தப் பண்ணையம்

- ஒடிசா மாநில அரசானது ஒப்பந்தப் பண்ணையத்திற்காக முதலீட்டாளர்கள் மற்றும் விவசாயிகள் ஒரு ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட அனுமதிக்கும் வகையில் ஓர் அவசரச் சட்டத்தை இயற்றியுள்ளது.
- இது வேளாண் பதப்படுத்துல்/ஏற்றுமதி அல்லது வர்த்தக அலகுகள் (மொத்த கொள்முதலாளர்கள்) விவசாயிகளிடமிருந்து குறிப்பிட்ட அளவுள்ள வேளாண் பொருட்களை முன்கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்ட விலையில் வாங்குவதற்காக, அவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் ஒரு பண்ணைய முறையாகும்.
- இந்தியாவில் ஒப்பந்தப் பண்ணையானது இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872ன் கீழ் ஒழுங்குமுறைப் படுத்தப்படுகின்றது.
- மாதிரி வேளாண் உற்பத்திப் பொருள் சந்தைக் குழுச் சட்டம், 2003 (APMC - Agricultural Produce Market Committee) என்ற சட்டமானது ஒப்பந்தப் பண்ணையத்திற்காக சில விதிகளை வழங்குகின்றது.
- வேளாண் துறை அமைச்சகமானது வரைவு மாதிரி ஒப்பந்தப் பண்ணையச் சட்டம், 2018 என்ற ஒரு மாதிரியை வெளியிட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் - மே 22

- இது உயிரியல் பன்முகத் தன்மை ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த தினத்தைக் குறிப்பதற்காக டிசம்பர் 29 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இது பின்னர் 1992 ஆம் ஆண்டின் ரியோ புவி மாநாட்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளப் பட்டதை அனுசரிப்பதற்காக மே 22 என்ற தேதிக்கு மாற்றப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு, "நமக்கான தீர்வுகள் இயற்கையில் உள்ளன" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★